# பத்திரிக்கை செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.5,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திருமதி.அகிலா, அய்யம்பாளையம், மணச்சநல்லூர், திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் தந்தை 29 சென்ட் நிலம் அய்யம்பாளையத்தில் கிரையம் செய்துள்ளார். அந்த நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்ய புகார்தாரர் மணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இவரது மனுவினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திருமதி.பழனியம்மாள், கிராம நிர்வாக அலுவலர் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருச்சி லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 31.03.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.பழனியம்மாள், கிராம நிர்வாக அலுவலர் லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## VILLAGE ADMINISTRATIVE OFFICER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.25,000/- FOR ISSUING PATTA NAME TRANSFER

The complainant Tmt.Akila, is residing at Ayyampalayam, Manachanallur, Tirchy District. The complainant father had purchased 29 cents land at Ayyampalayam and applied patta name transfer at Manachanallur Tahsil Office, Tiruchy District. Tmt.Palaniammal, Village Administrative Officer, demanded Rs.25,000/- for processing her application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruchy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 31.03.2023, during the trap proceedings, Tmt.Palaniammal, Village Administrative Officer, reiterated her earlier demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested.